133

அனுப்புநர்
திரு.க.மூக்கையா, பி.இ.,எம்டெக்.,
உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
இனாம் கரூர்,
பழைய நகராட்சி கட்டிடம்,
கரூர் நகராட்சி சென்டர்,
பெரியகுளத்து பாளையம்,
கரூர் மாவட்டம்-639 001.
E mail id : ad.karur.dist@gmail.com
Ph: 04324-223625

பெறுநர்
1) தலைவர்,
மண்மங்கலம் ஊராட்சி/ கிராமம்,
கரூர் மாவட்டம்.
2) வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),
கரூர் ஊராட்சி ஒன்றியம்,
கரூர் மாவட்டம்.

ந.க.எண். 1311/2020/கமா. நாள்.31.12.2020.

ஐயா,

பொருள் : மனைப்பிரிவு - மாவட்ட நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் அலுவலகம் - கரூர் மாவட்டம் - மண்மங்கலம் வட்டம் - கரூர் ஊராட்சி ஒன்றியம் - மண்மங்கலம் கிராமம் - சர்வே எண்கள்-166/1B,2 0.99.80ஹெக்டேர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவின் உத்தேச சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு ஆகியவற்றினை உள்ளாட்சிக்கும் TANGEDCO-ற்குரிய இடத்தினை மின்வாரியத்திற்கும் - தானபத்திர மூலம் ஒப்படைப்பு செய்தல் - தொடர்பாக.

பார்வை:
1) மனுதாரர்களின் விண்ணப்பம் மற்றும் அதன் இணைப்புகள் பெறப்பட்ட நாள்-17.12.2020 மற்றும் 30.12.2020.
2) மனுதாரர் இணைதய விண்ணப்ப பதிவு எண்-202002501019570. நாள்-05.12.2020.
3) அரசாணை எண்-18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்-04.02.2019.
4) நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்-4367/2019-பிஏ2, நாள்-05.02.2020.
5) அரசாணை எண்-181, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்(யுடி4(1))துறை, நாள்-09.12.2020.

....1....புத்தகம்..2021....ம்
வருடத்திய ....101....ம்
ஆவணம்....23....தாள்களைக்
கொண்டது ....1....வது தாள்
பதிவு அலுவலர்

-----

பார்வை(1)-ல் கண்ட மனுதாரரின் கடிதங்களுடன் பெறப்பட்டவை பரிசீலிக்கப்பட்டு, கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், கரூர் ஊராட்சி ஒன்றியம், மண்மங்கலம் கிராமம், சர்வே எண்கள்-166/1B,2-ல் 0.99.80ஹெக்டேர் பரப்பளவில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்படவுள்ளது. அதன் பொருட்டு, பார்வை(3) மற்றும் (4)-ல் கண்ட அரசாணை மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளபடியும், இத்துடன் இணைத்துள்ள சாலை அமைப்பு வரைபடத்தில் கண்டுள்ள சாலைகள்(மூலை முடக்கு உட்பட) மற்றும் பொது உபயோகப் பரப்பினை பார்வை (5)-ல்

..2

கண்டுள்ள அரசாணையினைத் தொடர்ந்து, உள்ளாட்சிக்குத் தான பத்திர மூலம் ஒப்படைப்பு செய்து அதன் அசல் ஆவணத்துடன் மற்றும் நகல் சான்றொப்பத்துடன் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், பார்வை(3)-ல் கண்ட அரசாணையின் அடிப்படையில் பொது உபயோகம் என ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தினையும், TANGEDCO- என ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதினையும் தான பத்திர மூலம் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்து அதன் அசல் மற்றும் மனுதாரரால் இவ்வலுவலகத்திற்கு நகலுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதனைத் தொடர்ந்து, பார்வை(3)-ல் கண்ட அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள விதி 47(11)-ன்படியும் மற்றும் பார்வை(5)-ல் கண்ட அரசாணையின்படி உள்ளாட்சியால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

கண்காணிப்பு பொறியாளர், TANGEDCO அவர்கள் மனைப்பிரிவு சாலை அமைப்பில் காண்பிக்கப்பட்டுள்ள TANGEDCO-ற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தினை தானபத்திர மூலம் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டதற்கான விபரம் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
கரூர் மாவட்டம்.

இணைப்பு :
பொது ஒதுக்கீடு மற்றும் சாலை அமைப்பு வரைபடம் - 3 நகல்கள்.

நகல் :
மனுதாரர்
திரு.P.காமராஜ் (ம) 4 நபர்கள்,
த/பெ.பொன்னுசாமி,
க.எண்-9/442, பாரிநகர் விஸ்தரிப்பு,
நாரயண நகர் வடக்கு,
சின்னாண்டாங்கோவில் ரோடு,
கரூர் மாவட்டம்.

} வரைபடத்தில் கண்டுள்ளபடி சாலைகள் (மூலை முடக்கு உட்பட) மற்றும் பொது உபயோகப் பரப்பினையும் மற்றும் TANGEDCO ஒதுக்கீடு பரப்பினையும் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்ய தெரிவிக்கப்படுகிறது.
(மனுதாரருக்கு 1 வரைபட நகல்)

...1...புத்தகம்...2021...ம்
வருடத்திய ......107......ம்
ஆவணம்...23...தாள்களைக்
கொண்டது ...15...வது தாள்
பதிவு அலுவலர்

# கரூர் ஊராட்சி ஒன்றியம், மண்மங்கலம் ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை : திருமதி. **N. ஜெயம்மாள்நல்லசாமி** தலைவர்

ந.க.எண் : 6 / 2021

நாள் : 15.03.2021

பொருள் .. மனைப்பிரிவு அனுமதி – கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், கரூர் ஊராட்சி ஒன்றியம், மண்மங்கலம் கிராமம் எல்லைக்குட்பட்ட சர்வே எண். 166/1B & 166/2 ல் ஏக்.2.46 செண்ட் பரப்பளவில் அமையும் மனைப்பிரிவுக்கு அங்கீகாரம் வழங்கி உத்தரவிடல் – தொடர்பாக.

ஊராட்சி மன்றம் மண்மங்கலம், கரூர் மாவட்டம்

பார்வை .. 1. அரசாணை (நிலை) எண்.71, ஊரகவளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை நாள். 16.06.2003.

2. மண்மங்கலம் ஊராட்சி மன்ற தீர்மான எண். 207/2020–21 நாள். 04.01.2021

3. நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர், கரூர் மாவட்டம், கடிதம் ந.க.எண். 1311/2020/கமா நாள். 31.12.2020 மற்றும் 24.02.2021

4. மனுதாரர்கள் திரு. P. காமராஜ் த/பெ பொன்னுசாமி, K. காதர்பாஷா த/பெ காதர்கனி , S. திருஞானசம்பந்தம் த/பெ சதாசிவம், R. அர்ஜூன்ராஜ் த/பெ ராமசாமி, S. அரவிந்த் த/பெ சுந்தர்ராஜ் என்பவரது விண்ணப்ப நாள். 02.01.2021 மற்றும் 13.03.2021

5. II- இணை சார்பதிவகம் 1– புத்தகம் எண். 109/2021. நாள்.13.01.2021

-------

**உத்தரவு ..**

கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், கரூர் ஊராட்சி ஒன்றியம், மண்மங்கலம் கிராமம் எல்லைக்குட்பட்ட சர்வே எண். 166/1B & 166/2 ல் ஏக். 2.46 செண்ட் பரப்பளவு கொண்ட இடத்தில் அமையும், மனைப்பிரிவுக்கு ஒப்புதல் கோரி பார்வை எண். 4–ல் காணும் விண்ணப்பத்தின்படி கரூர் நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர், கரூர் மாவட்டம், அவர்களுக்கு விண்ணப்பிக்கப்பட்டது. பார்வை 2–ல் காணும் விவரப்படி இம்மனைப்பிரிவினை அங்கீகரித்து மண்மங்கலம் ஊராட்சி மன்ற தீர்மான எண். 207/2020–2021, நாள். 04.01.2021–ன் படி தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது. பார்வை 3–ல் காணும் நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் 24.02.2021–ந் தேதிய கடிதத்தின்படி மேற்படி இடத்தில் அமையும் வரைபடத்திற்கு உரிய நிபந்தனைகளுடன் ம.வ/மா.ந.ஊ.உ.இ.(கமா) எண் : 24/2021 என எண்ணிடப்பட்டு இறுதி மனைப்பிரிவு அங்கீகாரம் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் கடிதத்தில் தெரிவித்துள்ள நிபந்தனைகளை நிறைவேற்றும் விதமாக மனுதாரர் மனை அளவுகளை பிரித்தும், சாலைகள் அமைத்தும், சாக்கடைகள் கட்டியும் அடிப்படை வசதிகளை மேற்கொண்டுள்ளார், மேலும் ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்யவேண்டிய மனைப்பிரிவு சாலை, பொது உபயோகம் 0.51% மற்றும் தமிழ்நாடு மின்சாரவாரியத்திற்கான 0.50% இடம் ஆகியவற்றை பார்வை 5–ல் காணும் ஆவணம் மூலம் மண்மங்கலம் ஊராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. இவற்றின் அடிப்படையிலும், கரூர் நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் அவர்களது இறுதி ஒப்புதல் அடிப்படையில், நிபந்தனைகள் ஏதேனும் விடுபட்டிருப்பின் அதனை நிறைவேற்ற வேண்டும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையில் மண்மங்கலம் கிராம சர்வே எண். 166/1B & 166/2 –க்கு கட்டுப்பட்ட ஏக்.2.46 செண்ட் பரப்பளவு கொண்ட மனைப்பிரிவுக்கு ஒப்புதல் வழங்கி இதன்வழி உத்தரவிடப்படுகிறது.

N.ஜெயமோகன்
தலைவர் 15-3-2021
மற்றும் நிர்வாக அலுவலர்,
மண்மங்கலம் ஊராட்சி,

பெறுதல்

P. காமராஜ் மற்றும் 4 நபர்கள்,
கரூர்.

நகல்.

1. உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்புத்துறை, கரூர் மாவட்டம், கரூர்.
2. II- இணை சார்பதிவாளர், கரூர் மாவட்டம்.